**கவனிக்க.**- (i) 2019.06.14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

(ii) இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2019 ஆம் ஆண்டிற்கான பொலநறுவை மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2129 - 2019 ජූනි මස 21 වැනි සිකුරාදා - 2019.06.21

2129 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 128 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- (i) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2019, யூன் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) உயர்கல்வி (தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரம்) சட்டமூலம் 2019, யூன் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, யூலை 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்காணி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

127-B81529-353 (2019/05)

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்

(அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறுவது)

இல. 324, செரண்டிப் டவர், காலி வீதி, கொழும்பு 00300 மற்றும் இல. 51, அலெக்ஸாண்ரா பிளேஸ், கொழும்பு 00700 என்னும் முகவரியைச் சேர்ந்த செரண்டிப் லொஜிஸ்டிக்ஸ் வேர்ள்ட்வைட் (பிறைவேட்) லிமிட்டெட் விடயத்திலும்

வழக்கு இலக்கம்:
மே. நீ. குடியியல்
28/2019/CO

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பகுதி XII இன் கீழ் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான விண்ணப்பத்தின் விடயத்திலும்.

ரமணி களுத்தரகே ஜயவீர,
இல. 15, டல்மெனி ரோட்,
நோர்த்பிரிட்ஜ்,
NSW 2063,
அவுஸ்திரேலியா.

மனுதாரர்

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட செரண்டிப் லொஜிஸ்டிக்ஸ் வேர்ள்ட்வைட் (பிறைவேட்) லிமிட்டெட்டை மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தால் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறுவது) ஒடுக்கப்படுவதற்கான விண்ணப்பம் 2019, மே மாதம் 24 ஆந் திகதி மனுதாரரான இல. 15, டல்மெனி ரோட், நோர்த்பிரிட்ஜ், NSW 2063, அவுஸ்திரேலியா என்னும் முகவரியைச் சேர்ந்த ரமணி களுத்தரகே ஜயவீர என்பவரால் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டது என்றும் இதில் குறித்த மனு 2019, யூலை மாதம் 23 ஆந் திகதி சொல்லப்பட்ட நீதிமன்றத்தின்முன் விசாரிக்கப்படுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதெனவும் சொல்லப்பட்ட மனு சம்பந்தமாக சொல்லப்பட்ட கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது ஆதரவு அல்லது எதிர்ப்புக் கட்டளை பிறப்பிக்க விரும்பின் விசாரணையின்போது நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அந்நோக்கத்துக்கான பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் சொல்லப்பட்ட கம்பனிக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்குத் தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி கீழ்க் கையொப்பமிட்டவர்களினால் அதற்குரிய கட்டணத்தின்படி பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

திருவாளர்கள் சின்னத்துரை சுந்தரலிங்கம் & பாலேந்திரா,
சட்டத்தரணிகளும் நொத்தாரிசுகளும்,
367 4/1, டாம் வீதி, கொழும்பு 01200,
தொலைபேசி இல. : (011) 2544400.

**குறிப்பு**.- மேற்குறித்த மனுவின் விசாரணையின்போது நேரில் சமூகமளிக்க எவராவது நோக்கம் கொள்வாராயின் அவர் அல்லது அவரின் அல்லது அவர்களின் நோக்கம் பற்றிய அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணிகள் திருவாளர்கள் சின்னத்துரை சுந்தரலிங்கம் மற்றும் பாலேந்திரா நிறுவனத்துக்கு நேரில் அல்லது கடிதம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். நபர்களின் பெயர்கள் விலாசங்கள் அறிவித்தலில் குறிப்பிடப்படவேண்டும் அல்லது குழுமமாயின் குழுமத்தின் பெயர் விலாசத்துடன் நபரினால் அல்லது குழுமத்தினால் அல்லது அவரது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியால் (அவ்வாறு இருப்பின்) கையொப்பமிடப்பட்டு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படலாம். தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் திருவாளர்கள் சின்னத்துரை சுந்தரலிங்கம் மற்றும் பாலேந்திரா அவர்களுக்கு 2019, யூலை மாதம் 22 ஆந் திகதி பி. ப. 6.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

திருவாளர்கள் சின்னத்துரை சுந்தரலிங்கம் & பாலேந்திரா,
மனுதாரர்களுக்கான சட்டத்தரணிகள்.

06-516

## மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்

(குடியியல் நியாயாதிக்கத்தைக் கொண்ட கொழும்பில் அமையப்பெற்றது)

இல. 5, பிரிவெனா வீதி, கல்கிசையில் அமைந்துள்ள A K N V CONTRACTORS (PRIVATE) LTD விடயத்திலும்;

மற்றும்

ஒடுக்குவதற்கான விண்ணப்பம் இலக்கம்: 29/2019/ CO

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான ஓர் விண்ணப்பம்.

விகாஷ் பலனியாண்டி பிள்ளை,
இல. 53-1/1, இரத்தினவலி வீதி, களுபோவில.

மனுதாரர்

மேற்கூறப்பட்ட கம்பனியை மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் (கொழும்பில் அமையப்பெற்றது) ஒடுக்குவதற்கான மனு 2019 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி.

விகாஷ் பலனியாண்டி பிள்ளை,
இல. 53-1/1, இரத்தினவலி வீதி,
களுபோவில.

என்பவரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றும்.

குறித்த மனுவானது 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 8 ஆந் திகதி நீதிமன்றத்துக்கு முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளதென்றும். மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது குறித்த மனு தொடர்பில் கட்டளை பிறப்பிப்பதை ஆதரவு அல்லது எதிர்க்க விரும்பின் விசாரணையின் போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அக்காரணத்திற்காக பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்குத் தேவைப்படின். மனுவின் ஒரு பிரதி கீழ்க் கையொப்பமிட்டவரினால் அதற்குரிய கட்டணத்தின்படி பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

திரு. சன்முகம் ஹிரோஷன் குமார்,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 156-1/11, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

**குறிப்பு**.- மேற்குறித்த மனுவின் விசாரணையின்போது நேரில் சமூகமளிக்க எவராவது நோக்கம் கொள்வாராயின் அவர் / அதனின் நோக்க அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணியான திரு. சன்முகம் ஹிரோஷன் குமார் அவர்களுக்கு நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சேர்ப்பிக்க வேண்டும். குறித்த அறிவித்தல் நபர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்கள் அல்லது கம்பனியாக இருப்பின் கம்பனியின் பெயர் மற்றும் விலாசம் அல்லது அவர்களுக்கு/அவருக்கு பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி இருப்பின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியின் பெயர் என்பவற்றை குறித்து மேற்குறித்தவருக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் போதிய கால அவகாசத்துடன் கிடைக்கக் கூடியதாக 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 7 ஆந் திகதி பி. ப. 6.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

திரு. சன்முகம் ஹிரோஷன் குமார்,
மனுதாரரின் சட்டத்தரணி.

06-613

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.